நிச்சயமாக அரசுக்கு வருவாய் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *273*, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

273—

ஒழுங்குமுறை விற்பனைக் குழு

***37739—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகரில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற்பனைக் குழுவிற்குத் தனியாக ஒரு கூடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் விற்பனைக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட புறம்போக்கு நிலத்தை நிலமாற்றம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய அனுமதி கிடைத்தவுடன், அந்நிலத்தைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *274*, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

274—

வீட்டுமனைப் பட்டா

***34692—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை அருகில் ராவணபுரம் ஊராட்சி மற்றும் மானுப்பட்டி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மக்களுக்கு குடியிருப்பு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS